# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br><br>Preliminary Register<br>**Sessions** | } | **Spl.Sessions Case No. : 12/2021** |

| | | | |
|---|---|---|---|
| **Deposition of witness for** | **Prosecution** | **:** | **P.W. : 5** |
| | Defence | : | D.W. : |
| | Court | : | C.W. : |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பிரவின்குமார் | | வயது | : |
| த/பெ. (அ) | : | | தொழில் | : |
| க/பெ. | | | | |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | ஜாதி | : |
| மாவட்டம் | : | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 27/06/2022**

Starting Time : 12.15 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது களரம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த வேலுசாமி, பழனியம்மாள் ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது ஆகும். அது **அதசா.ஆ.3** ஆகும். அந்த கையெழுத்தை களரம்பட்டி கிராமத்தில் வைத்து போட்டேன். அந்த கையெழுத்தை வெள்ளை பேப்பரில் போட்டேன். அந்த கையெழுத்தை போலிஸ் மேடம் கேட்டார் நான் போட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிஸார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின்போது நான் 18.03.2021 ஆம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த வாசுதேவன் மகன் ராஜேந்திரன் என்பவருடன் களரம்பட்டி மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் உள்ள பாலக்கட்டையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம் எனவும், அப்போது பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலிசார் எங்களிடம் வந்து பாதிக்கப்பட்ட சிறுமியை வேலுசாமி மகன் கனகராஜ் என்பவர் தவறான முறையில் நடந்து கொண்டதாக கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு வந்திருப்பதாகவும் சம்பவ இடத்தை காவல் ஆய்வாளர் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ய இருப்பதாகவும், அதற்கு என்னையும் ராஜேந்திரனையும் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் சம்மதிக்கவே எங்களின் முன்னிலையில் 14.30 மணியளவில் அந்த இடத்தில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் எனவும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் கையொப்பம் போட்டோம் எனவும் கூறிவிட்டு தற்சமயம் எதிரியை காப்பாற்றும் பொருட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரில்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Ending Time: 12.30 PM